# தூய ஆரோக்கிய அன்னை திருவிழா



08
DAY

## தூய ஆரோக்கிய அன்னை ஆண்டவரின் ஆலயம்
## (புதிய உடன்படிக்கையின் பேழை)

# தூய ஆரோக்கிய அன்னை ஆண்டவரின் ஆலயம்

## (புதிய உடன்படிக்கையின் பேழை)

> பின்பு விண்ணகத்திலிருந்து எழுந்த பெரும் குரல் ஒன்றைக் கேட்டேன். அது,῾இதோ! கடவுளின் உறைவிடம் மனிதர் நடுவே உள்ளது. அவர் அவர்கள் நடுவே குடியிருப்பார். அவர்கள் அவருக்கு மக்களாய் இருப்பார்கள். கடவுள்தாமே அவர்-களோடு இருப்பார்: அவரே அவர்களுடைய கடவுளாய் இருப்பார்.
>
> திவெ. 21:3

## அன்பில் இணைவோம்

குரு: ஆண்டவருடைய மீட்பை அறிவியுங்கள்
அவருடைய அரும்பெரும்செயல்களை எடுத்தியம்புங்கள்
Priest : Announce the salvation of the Lord
Proclaim his works among the people

மக் என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்
People: His mercy is everlasting

குரு: இறைவார்த்தையால் இவ்வுலகை ஒளிர்வித்த
இறைவனை நாம் வாழ்த்துவோம்.
Priest : Bless the Lord our God
Who sent the Word of life into the World

மக் ஆண்டவர் தம் செயல்களில் நீதியுள்ளவர்
அவருடைய செயல்கள் புனிதமானவை
அனைத்துலகே ஆண்டவரைப் புகழ்வாயாக
உயிருள்ள அனைத்தும் அவரின் திருநாமத்தை வாழ்த்துவதாக
People: Just is the Lord in all His ways
And Holy in all His works
Let every creature praise Him
and all living beings bless his name

## புகழ்வோம் நம் அன்னையை

மாதா உன் கோவிலில்
மணி தீபம் ஏற்றினேன்.
தாயென்று உன்னைதான்
பிள்ளைக்குக் காட்டினேன்

மேய்ப்பன் இல்லாத மந்தை வழிமாறுமே
மேரி உன் ஆசிகொண்டால் விதி மாறுமே
மெழுகுபோல் உறுகினோம்
கண்ணீரை மாற்றுவாய்

காவல் இல்லாத ஜீவன் கண்ணீரிலே
கரை கண்டிராத ஓடம் தண்ணீரிலே
அருள் தரும் திருச்சபை
மணியோசை கேட்குமே—மாதா

## திருப்பாடலில் செபிப்போம் .திபா.84:1-12

1படைகளின் ஆண்டவரே!
உமது உறைவிடம் எத்துணை அருமையானது!

2என் ஆன்மா ஆண்டவரின் கோவில்
முற்றங்களுக்காக ஏங்கித் தவிக்கின்றது;
என் உள்ளமும் உடலும் என்றுமுள
இறைவனை மகிழ்ச்சியுடன் பாடுகின்றது.

3படைகளின் ஆண்டவரே! என் அரசரே!
என் கடவுளே! உமது பீடங்களில்
அடைக்கலான் குருவிக்கு வீடு கிடைத்துள்ளது;
தங்கள் குஞ்சுகளை வைத்திருப்பதற்குச்
சிட்டுக் குருவிகளுக்குக் கூடும் கிடைத்துள்ளது.

4உமது இல்லத்தில் தங்கியிருப்போர் நற்பேறு பெற்றோர்;
அவர்கள் எந்நாளும் உம்மைப் புகழ்ந்து கொண்டேயிருப்பார்கள்.
5உம்மிடமிருந்து வலிமை பெற்ற மானிடர் பேறு பெற்றோர்;
அவர்களது உள்ளம் சீயோனுக்குச் செல்லும்
நெடுஞ்சாலைகளை நோக்கியே உள்ளது.

6வறண்ட பாக்கா பள்ளத்தாக்கை
அவர்கள் கடந்து செல்கையில்,
அது நீரூற்றுகள் உள்ள இடமாக மாறுகின்றது;
முதல் பருவமழை அதனை நீர்நிலைகள் நிறைந்த இடமாக்கும்.

7அவர்கள் நடந்து செல்கையில் மேலும் மேலும் வலிமை பெறுகின்றார்கள்;
பின்பு, சீயோனின் தெய்வங்களின் இறைவனைக் காண்பார்கள்.

8படைகளின் ஆண்டவரே, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்!
யாக்கோபின் கடவுளே! எனக்குச் செவிசாய்த்தருளும்!

9எங்கள் கேடயமாகிய கடவுளே, கண்ணோக்கும்!

நீர் திருப்பொழிவு செய்தவரின் முகத்தைக் கனிவுடன் பாரும்!
10வேற்றிடங்களில் வாழும் ஆயிரம் நாள்களினும்
உம் கோவில் முற்றங்களில் தங்கும் ஒருநாளே மேலானது;
பொல்லாரின் கூடாரங்களில் குடியிருப்பதினும்,
என் கடவுளது இல்லத்தின்
வாயிற்காவலனாய் இருப்பதே இனிமையானது.

11ஏனெனில், கடவுளாகிய ஆண்டவர் நமக்குத்
கதிரவனும் கேடயமுமாய் இருக்கின்றார்;
ஆண்டவர் அருளையும் மேன்மையையும் அளிப்பார்;
மாசற்றவர்களாய் நடப்பவர்களுக்கு நன்மையானவற்றை வழங்குவார்.

12படைகளின் ஆண்டவரே!
உம்மை நம்பும் மானிடர் நற்பேறு பெற்றோர்!

## Psalm - 84:1-12

1 How lovely is your dwelling place,
O Lord of hosts!
2 My soul longs, indeed it faints
for the courts of the Lord;
my heart and my flesh sing for joy
to the living God.
3 Even the sparrow finds a home,
and the swallow a nest for herself,
where she may lay her young,
at your altars, O Lord of hosts,
my King and my God.
4 Happy are those who live in your house,
ever singing your praise.*Selah*
5 Happy are those whose strength is in you,
in whose heart are the highways to Zion.[a]
6 As they go through the valley of Baca
they make it a place of springs;
the early rain also covers it with pools.
7 They go from strength to strength;
the God of gods will be seen in Zion.
8 O Lord God of hosts, hear my prayer;
give ear, O God of Jacob!*Selah*
9 Behold our shield, O God;
look on the face of your anointed.
10 For a day in your courts is better
than a thousand elsewhere.
I would rather be a doorkeeper in the house of my God
than live in the tents of wickedness.
11 For the Lord God is a sun and shield;

he bestows favor and honor.
No good thing does the LORD withhold
from those who walk uprightly.
12 O LORD of hosts,
happy is everyone who trusts in you.

# செவிமடுப்போம் இறைவார்த்தைக்கு

## புனித லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்: லூக். 1:26—38

26ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்னும் வானதூதரைக் கடவுள் கலிலேயாவிலுள்ள
நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னியிடம் அனுப்பினார். 27அவர் தாவீது
குடம்பத்தினராகிய யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவருக்கு மண ஒப்பந்தமானவர்.
அவர் பெயர் மரியா. 28வானதூதர் மரியாவுக்குத் தோன்றி,‘அருள்மிகப் பெற்றவரே வாழ்க!
ஆண்டவர் உம்மோடு இருக்கிறார் என்றார். 29இவ்வார்த்தைகளைக் கேட்டு அவர்
கலங்கி, இந்த வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணிக் கொண்டிருந்தார். 30வானதூதர்
அவரைப் பார்த்து,‘மரியா, அஞ்சவேண்டாம்: கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர்.
31இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்: அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர்.
32அவர் பெரியவராயிருப்பார்: உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை
தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். 33அவர்
யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய
ஆட்சிக்கு முடிவே இராது என்றார். 34அதற்கு மரியா வானதூதரிடம்,‘இது எப்படி நி-
கழும்? நான் கன்னி ஆயிற்றே! என்றார். 35வானதூதர் அவரிடம்,‘தூய ஆவி உம்மீது
வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப்
போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும். 36உம் உறவினராகிய
எலிசபெத்தும் தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறார்.
கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட அவருக்கு இது ஆறாம் மாதம். 37ஏனெனில்,
கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை‘ என்றார். 38பின்னர் மரியா,‘நான் ஆண்டவரின்
அடிமை: உம்சொற்படியே எனக்கு நிகழட்டும் என்றார். அப்பொழுது வானதூதர் அவரை
விட்டு அகன்றார்.

இது கிறிஸ்துவின் வாழ்வு தரும் நற்செய்தி
கிறிஸ்துவே உமக்குப் புகழ்..

Lk:1:26-38

26 In the sixth month the angel Gabriel was sent by God to a town in Galilee called
Nazareth, 27 to a virgin engaged to a man whose name was Joseph, of the house of
David. The virgin’s name was Mary. 28 And he came to her and said, “Greetings,
favored one! The Lord is with you.”[a] 29 But she was much perplexed by his words
and pondered what sort of greeting this might be. 30 The angel said to her, “Do not be
afraid, Mary, for you have found favor with God. 31 And now, you will conceive in
your womb and bear a son, and you will name him Jesus. 32 He will be great, and will
be called the Son of the Most High, and the Lord God will give to him the throne of
his ancestor David. 33 He will reign over the house of Jacob forever, and of his king-
dom there will be no end.” 34 Mary said to the angel, “How can this be, since I am a

virgin?"[b] 35 The angel said to her, "The Holy Spirit will come upon you, and the power of the Most High will overshadow you; therefore the child to be born[c] will be holy; he will be called Son of God. 36 And now, your relative Elizabeth in her old age has also conceived a son; and this is the sixth month for her who was said to be barren. 37 For nothing will be impossible with God." 38 Then Mary said, "Here am I, the servant of the Lord; let it be with me according to your word." Then the angel departed from her.

**இறை வார்த்தையை உள்ளத்தில் இருத்தி சிந்திப்போம்...**

## நம் உள்ளத்தில் எழும் மன்றாட்டுக்களை நம் ஆரோக்கிய அன்னை வழியில் அன்பர் இயேசுவிடம் சமர்ப்பிப்போம்.

1. அன்னையாம் திருச்சபைக்காக மன்றாடுவோம்: தாய் திருச்சபையை வழிநடத்தும் நமது திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள் குருக்கள் மற்றும் இறைமக்கள் நமது அன்னை மரியாவைப் போல ஆவியின் வரங்களால் நிரப்பட்டு ஒற்றுமையின் கருவிகளாகத் திகழ்ந்திட ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.**

2. நமது தளத்திருச்சபைக்காக மன்றாடுவோம்.: நமது தலைமை ஆயர் மற்றும் இனையாயர்கள் நமது உயர் மறைமாவட்டதில் உள்ளஒவ்வொரு குடும்பங்களிலும் இறைவார்த்தையின் ஒளி மகிழ்ச்சியிலும் மனநிறைவிலும் ஒற்றுமையிலும் வாழ்ந்திட வளர்ந்திட ஆண்டவரே அன்னயைாம் மரியாள் வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.**

3. அமெரிக்கா வாழ் இந்தியர்களுக்காக அவர்களின் குடும்பங்களுக்காக மன்றாடுவோம். அன்பிலும் மகிழ்ச்சியிலும் ஒன்றுபட்டு வாழ்ந்திடவும் ஒருவரையொருவர் மன்னித்து ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை தந்திட ஆண்டவரே அன்னை மரியாவழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.**

4. புனித ஆரோக்கிய அன்னையின் பத்தர்கள் அனைவருக்காகவும் மன்றாடுவோம்: அன்னையைப்போல பிறரன்பிலும் இறையன்பிலும் நாளுக்கு நாள் வாழ்ந்து நற்செய்திக்குச் சான்றுபகர்ந்திட அருள்வேண்டி ஆண்டவரே அன்னை மரியா வழியாக ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

**இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.**

5. நமது தனிப்பட்ட தேவைகளுக்காக ….

…..ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.**

# புனித ஆரோக்கிய அன்னை நவநாள் செபம்

மகா பரிசுத்த கன்னிகையே! இயேசுவின் தாயாராயிருக்குமாறு
பரிசுத்த மூவொரு கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்ட தூய கன்னி மரியே!
கடவுளுடைய திருப்புதல்வர் உமது திருஉதரத்தில்
மனிதராக அவதரித்தபோதும் ஒன்பது மாதமளவாக
அவரை உமது மாசணுகாத கருவில் தாங்கியபோதும்
நீர் அடைந்த பேரின்பத்தை உமது ஊழியர்களாகிய நாங்கள்
நினைவுகூர அருள்கூர்ந்தமைக்கு உமக்கு நன்றிகூருகின்றோம்.
எமது அன்பினாலும் தூய வாழ்வினாலும்
நீர் அடைந்த பேரின்பத்தை நாங்களும் அடைய
எங்களுக்காக மன்றாடும் தாயே!
துன்பப்படுவோரின் தாயே இரக்கமிக்க அன்னையே!
நீர் அனுபவித்த பேரின்பத்தைக் கொண்டாடுகின்றவர்களுக்கு
நீர் வாக்களித்துள்ள விசேச உதவியையும் பாதுகாப்பையும்
எங்களுக்கு இவ்வேளையில் பெற்றுத்தந்தருளும்.
கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற உம் திருமகன் இயேசுகிறிஸ்துவின்
வல்லமைமிக்க வார்த்தையில் நம்பிக்கைகொண்டு
உமது வல்லமைமிக்க மன்றாட்டுகளில் நம்பிக்கைகொண்டு
இந்த நவநாட்களில் நாங்கள் செய்யும் விண்ணப்பங்களை
கடவுளுடைய திருவுளத்திற்கு மாறாயிருந்தால்
எமக்கு எவ்வரம் மிகவும் தேவையோ அவற்றை பெற்றுத்தந்தருளும்.
(இங்கு மன்றாட்டுக்களை நினைவிற்கொள்ளவும்)
இறைவனின் தாயே! இப்பொழுது உமக்கு வணக்கமாக
நாங்கள் செய்யும் இந்த நவநாளை உம்மில்கொண்டிருக்கும்
ஆழ்ந்த நம்பிக்கையின்பொருட்டு செய்கிறோம்.
இயேசு மனிதராக அவதரித்தபோது
உமது திருவுளம் அடைந்த தெய்வீக மகிழ்ச்சியை
அதற்கு வணக்கமாக நாங்கள் செய்யும் இந்நவநாள் பக்தி முயற்சியையும்
இப்பொழுது நாங்கள் சொல்லப்போகும்
அருள் நிறைந்த செபத்தையும் அன்போடு ஏற்றுக்கொள்ளும் தாயே!
(9 முறை அருள் நிறைந்த செபம்)
நீர் அணிந்திருக்கும் மணிமுடியில்
எம் செபங்கள் அத்தனையும் விண்மீண்களென துலங்குமென

ஆழ்ந்த நம்பிக்கைகொள்கின்றென்.
வருந்துவோருக்கு ஆறுதலே!
எம் வேளைநகர் ஆரோக்கியத் தாயே!
நாங்கள் உம்மிடம் மன்றாடும் விண்ணப்பங்கள் நிறைவேறுமாறு
உமக்கு வணக்கமாக இதுவரை புனிதர்களால் செய்யப்பட்ட
எல்லா அரும்பெரும் நிகழ்வுகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.
உமது திருமகனும் எங்கள் ஆண்டவருமான
இயேசு கிறிஸ்துவின் திருஇருதயத்தில் பொங்கி வழியும் பேரன்பையும்
அதுபோன்ற உமது அன்பையும் நினைவிற்கொண்டு
உமது அடியோர்களாகிய எங்களது செபத்தை ஏற்று
எம் மன்றாட்டுகளை அடைந்து தந்தருளும் அம்மா. ஆமென்.

## ஆண்டவரில் அக்களிக்கும் நம் ஆரோக்கிய அன்னையை வாழ்த்துவோம்.

ஆரோக்கிய மாதாவே –உமது
புகழ்பாடித் துதித்திடுவோம்
எந்நாளும் பாடித்துதித்திடுவோம்.

அலைகள்மோதிடும் கடற்கரைதன்னில்
வசித்திட ஆசை வைத்தாயே
புலவகை கலைகளும் பாரினில் துலங்கிட
அனைவருக்கும் துணைபுரிந்தாயே - 2

தேன் கமழும் சோலை சூழ்ந்து விளங்கும்
வேளாங்கண்ணியில் அமர்ந்தாயே
வானகமும் இந்த வையகமும்
செழித்தோங்கிட அருள் புரிந்தாயே

### சேபிப்போமாக

ஆண்டவரே பரிசுத்த தந்தையே இறைவா!
உமது ஆவியின் ஆற்றல்மிக்க செயலால்
உமது வல்லமை விசுவாசிகளின் உள்ளங்களில் நிழழிடச்செய்து
உமது தெய்வீகப்பிரசன்னத்தால் தூய்மைப்படுத்தி,
ஒளிரிந்திடச்செய்து அர்ச்சித்திருக்கின்றீர்.
தூய கன்னிமரியாள் விசுவாசத்தோடு உமக்கு கீழ்ப்படிந்து
உம் திருமகன் கிறிஸ்து மனித அவதாரம் எடுத்த மறைபொருளிலில்
உமது மகிமை விளங்க ஆவியின் கொடைகளால் அலங்கரிக்கப்பட்ட
புனித ஆலயமாக இந்த அவனியில் திகழ்ந்தார்.
நீதியின் கதிரவன் ஒளிரும் அரசமாளிகையாகவும்
அருட்பெருக்கெடுக்கும் ஆறுகளால் அலங்கரிக்கப்பட்ட புனித நகரமரகவும்

புதிய உடன்படிக்கையின் ஆசிரியரும் எங்கள் மீட்பருமான
கிறிஸ்து குடிகொண்ட உடன்படிகை பெட்டகமாகவும் திகழ்ந்தாள்.
நாங்களும் அவரின் வழியில் அன்பர் இயேசுவின் வார்த்தைகளை
உள்ளத்தில் இறுத்தி சிந்தித்து புதிய உடன்படிக்கையின் மக்களாகத்
திகழ வரமருளா தூய ஆரோக்கிய அன்னை வழியாக
உம்மை மன்றாடுகின்றோம்.

